DEPOSITION OF WITNESS
(ORDER XVIII RULE 4 OF C.P.C)

IN THE COURT OF DICTRICT MUNSIF, THIRUVAIYARU

| | | |
|---|---|---|
| Case No. | : | O.S. No.173/2015 |
| Deposition of | : | PW4 |

| | | |
|---|---|---|
| Name | : | **திரு. சுரேஷ்கண்ணன்** |
| Father's Name | : | **கணேசன்** |
| Village | : | **சாத்தனூர்** |
| Tahsil | : | **திருவையாறு** |
| Calling | : | **கிராம நிர்வாக அலுவலர் சாத்தனூர் கிராமம்** |
| Age | : | 45 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of September 2025.

முதல் விசாரணை:

நான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை சார்வு செய்யப்பட்டு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் கோரியுள்ள சாத்தனூர் கிராம புல எண். 133/2 தொடர்புடைய ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். (மேற்படி புல எண். 133/2 வழக்குத் சொத்து அல்ல என பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. வழக்காணங்களை பரிசிலித்தபோது வழக்கு சொத்து மரூவூர் கிராமம் புல எண்.7/2 தொடர்பாக விளம்புகை மற்றும் சுவாதீனம் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது ஆஜராகியுள்ள சாட்சி மரூவூர் கிராம நிர்வாக அலுவலர் அல்ல).

தற்பொழுது சாத்தனூர் கிராம புல எண். 133/2 ரெத்தினம் மகள் சித்ரா, ரெத்தினம் மகன் நாடிமுத்து, ரெத்தினம் மகன் சிங்காரவேல், ஆகியோர் பெயரில் கூட்டு பட்டாவாக உள்ளது. இதற்கு முன்பு ரெத்தினம் மகள் சித்ரா பெயரில் இருந்தது. 06.07.2011 –ல் பட்டா எண்.51–ல் கூட்டு பட்டாவாக மாறியது. **சாத்தனூர் கிராம புல எண்.133/2 க்குரிய சிட்டா உண்மை நகல் சா.சா.ஆ.1** ஆகும்

**<u>1, 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) சாத்தனூர் கிராம புல எண்.133/2 க்கும் மரூவூர் கிராம புல எண்.7/2 க்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். தனிப்பட்டாவை கூட்டு பட்டாவாக மாற்றவேண்டும் என்றால் விண்ணப்பம் மற்றும் ஆவணத்தின் அடிப்படையில் தான் சேர்க்க வேண்டும் என்றால் சரிதான். புல எண்.133/2 கடந்த 06.07.2011 தேதியில் கூட்டு பட்டாவாக மாற்றப்பட்டுள்ளது அந்த சமயம் குடும்பத்தில் ஏற்பட்ட 28.12.2004 நாளிட்ட பாகபத்திரம் அடிப்படையில் தான் கூட்டு பட்டாவாக ரெத்தினம் மகன் நாடிமுத்து, ரெத்தினம் மகன் சிங்காரவேல் ஆகியோரது பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி சாத்தனூர் கிராம நிர்வாக அலுவலராக எவ்வளவு காலம் பணிபுரிகிறேன் என்றால் கடந்த 2 மாதங்களாகத்தான் இந்த கிராமத்தில் பணிபுரிகிறேன்.

2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என கூறப்படுகிறது.

Sd/ - Sureshkannan

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2025.09.19 18:33:12 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU